## பிரதமர் பேச்சு: பீகாரில் தேர்தல் நடக்கும் நேரத்தில், அங்கு நிலவும்

# வேலையில்லாத் திண்டாட்டத்தை - வறுமையைத் திசை திருப்பி வாக்குப் பெறவே!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கண்டன அறிக்கை!

சென்னை, நவ. 4 -
தமிழ்நாட்டில்பீகாரிகள் வஞ்சிக்கப்படுகிறார்கள், தாக்கப்படுகிறார்கள் என்று பொறுப்பு வாய்ந்த பிரதமர் பதவியில் இருப்பவர் பேசலாமா? வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் தலை விரித்தாடும் பீகாரில், நடக்கவிருக்கும் தேர்தலில் திசை திருப்பும் முயற்சிதான் இது - கண்டிக்கத்தக்கது இது என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

பிரதமர் நரேந்திர மோடி அக்டோபர் 30, 2025 அன்று பீகார் மாநிலத்தின் சாப்ராவில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பேசிய பேச்சு நாடு தழுவிய அளவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திவிட்டது.

“தமிழ்நாட்டில் பீகார் மாநில தொழிலாளர்கள் தாக்கப்படுகின்றனர், உழைக்கும் பீகார் மக்களை தி.மு.க. துன்புறுத்துகிறது, இது தொடர்பான எல்லாம் தெரிந்தும் ஆர்.ஜே.டி., காங்கிரஸ் அமைதியாக இருக்கிறது, இவர்கள் அதற்கு எதிர்வினை ஆற்றவில்லை” என்றார்.

**2023 ஆம் ஆண்டிலும் ஒரு வதந்தி!**

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம், தமிழ்நாட்டில், பீகார் உள்ளிட்ட வட மாநிலத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதாகச் சமூக ஊடகங்களில் ஒரு போலியான தகவல் மற்றும் தவறாகச் சித்தரிக்கப்பட்ட காட்சிப் பதிவுகள் பரவின.

தமிழ்நாடு காவல்துறை உடனடியாக இந்த வதந்திகள் குறித்து விசாரித்தது. அந்த வதந்திகள் அனைத்தும் தவறானவை, தாக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சம்பவங்கள் உண்மையில் நடக்கவில்லை; ஆந்திர மாநிலத்தில் உள்ளூர் தொழிலாளர்களுக்குள் அடித்துக்கொள்ளும் காணொலிகளும், போலியாக சித்தரிக்கப் பட்ட காட்சிப் பதிவுகளும்தான்



அவை - தவறாகப் பயன்படுத்தப்பட்டவை என்று உறுதி செய்தது.

**எத்தகைய பித்தலாட்டம் இது!**

தமிழ்நாட்டின் முதலமைச்சர் மற்றும் காவல் துறை தலைமை இயக்குநர் ஆகியோர் வட மாநிலத் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதாகவும், வதந்திகளைப் பரப்புவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அப்பொழுதே தெரிவித்தனர்.

பீகார் அரசு அதிகாரிகளும் தமிழ்நாட்டிற்கு வந்து ஆய்வு செய்த பின்னர், தொழிலாளர்கள் பாதுகாப்பாக இருப்பதாகவும், எந்த விதமான தாக்குதல்களும் நடக்கவில்லை என்றும் உறுதிப்படுத்தினர்.

குறிப்பாக, 'பீகார் கி அவாஜ்' என்ற பெயரில் யுடியூப் சேனல் நடத்திவரும் மனீஷ் கஷ்யப் என்பவர் திட்டமிட்ட வகையில் போலியான காட்சிப் பதிவுகளை பீகாரிலேயே உருவாக்கி, பின்னணியில் தமிழில் பேசுவது போன்று எல்லாம் 'எடிட்' செய்து அதனை சமூக வலைதளத்தில் பரப்பினார். இந்தக் காட்சிப் பதிவு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

ஆண்டுக்கு 12 ஆயிரம் கூட வருவாய் இல்லாத இவரின் வங்கிக் கணக்கில் 2 மாதத்தில் பல தவணைகளாக 40 லட்சம் ரூபாய் வரை வரவு வைத்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவர் கைது செய்யப்பட்டு மதுரை சிறையில் அடைக்கப்பட்டார்.

ஓராண்டிற்குப் பிறகு பிணையில் வெளிவந்த அந்தப் பேர்வழி, தற்போது பா.ஜ.க.வில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

**பீகாரில் பிரதமர் பேசியது அபாண்டமானது!**

இந்த நிலையில், தற்போது கடந்த 30.10.2025 அன்று சப்ரா தேர்தல் பரப்புரையில், பிரதமர் மோடியின் குற்றச்சாட்டு, அவதூறும், அபாண்டமும் கலந்த ஆதாரமற்ற, போலியான தகவல் மற்றும் வதந்தியின் அடிப்படையிலானது. தமிழ்நாட்டில் பீகார் தொழிலாளர்கள் தி.மு.க. வினரால் தாக்கப்பட்டதாக வெளியான தகவல் உண்மையற்றதும், விஷமத்தனமானதுமாகும்.

தேசியத்தைக் கட்டிக் காப்பதாக 56 அங்குலம் உள்ள தனது மார்பைத் தட்டும் பிரதமர் - இப்பொழுது பீகாரிகள் - தமிழர்கள் என்று பிரித்துப் பேசுவதும், இரு மாநிலத்தவர்களுக்கிடையே மோதல் நடப்பது போலவும் பேசியிருப்பது பச்சையான பிரிவினை வாதம் அல்லவா - இனவாதம் அல்லவா!

பீகாரில் தலைவிரித்தாடும் வேலையில்லாத் திண்டாட்டம் - வறுமை! கிட்டத்தட்ட 12 லட்சம் வட மாநிலத்தவர்கள் தமிழ்நாட்டின் குக்கிராமம் வரை வேலை செய்கிறார்கள். எந்த இடத்திலும் பிரச்சினை இல்லை. பாதிக்கப்பட்டதாக அவர்கள் யாரும் இதுவரை சொன்னதும் இல்லை!

வட மாநிலத்தவர்கள் தமிழ்நாட்டை நோக்கி வேலை வாய்ப்பைத் தேடிக் குவிவதற்குக் காரணம், பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் - வறுமை கொடிகட்டிப் பறப்பதால்தானே!

பீகாரில் தேர்தல் விரைவில் நடக்க உள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் பிரச்சினையாக உள்ளது. இதைத் திசை திருப்பவே பிரிவினைவாதத்தை செயற்கையாக உண்டாக்கி, ஒரு மோதல் போக்கைத் தூண்டிவிடுவது புரிகிறது.

தேர்தல் நடக்கும்போது எல்லாம் இதுபோன்ற இன மோதல், மத மோதலை உண்டாக்குவது பி.ஜே.பி.க்கே உள்ள கலாச்சாரம் ஆகும். ஒடிசா சட்டப் பேரவைத் தேர்தலின்போது, கட்டாக்கில் பேசிய பிரதமர் மோடி (20.5.2024) ஒடிசா - பூரி ஜெகந்நாதர் கோவிலின் புதையல் சாவியைத் தமிழ்நாட்டிற்குத் திருடிக் கொண்டு சென்றுவிட்டார்கள் என்று இதே பிரதமர் கூறவில்லையா?

**அப்பொழுதே முதலமைச்சர் கண்டனம்!**

தமிழர்களைத் “திருடர்கள்” என்று கொச்சைப்படுத்துவதைக் கண்டித்து அப்போதே தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கண்டித்தது உண்டே!

அதுமட்டுமல்ல, “ஒடிசாவை, ஒரு தமிழ்நாட்டுக்காரர் ஆளப் பார்க்கிறார்” (வி.கே.பாண்டியன் அய்.ஏ.எஸ். அவர்களை மனதிற்கொண்டுதான் அவ்வாறு குறிப்பிட்டார்) என்றார்.

ஒடிசா மாநிலத்தை ஒரு தமிழ்நாட்டுக்காரர் ஆட்சி செய்ய முயற்சிக்கிறார் என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா தேர்தல் நேரத்தில் பேசினாரே!

பொறுப்பு வாய்ந்த பெரிய பதவியில் இருக்கும் பிரதமரும், உள்துறை அமைச்சரும் இப்படிப் பொறுப்பற்ற முறையில் பேசுவதும், மாநிலங்களுக்கிடையே பிரிவினை - பிளவை ஏற்படுத்தி, மோதலை உண்டாக்குவதும் கண்டிக்கத்தக்கது.

**கரோனா காலமும், வட மாநிலத்தவர்களும்!**

கரோனா காலத்தில் தமிழ்நாட்டில் வேலை செய்து வந்த வட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் குடும்பம் குடும்பமாக குழந்தைக் குட்டிகளுடன், மூட்டை முடிச்சுகளை சுமந்து கொண்டு சொந்த மாநிலத்திற்கு நடைப்பயணமாகச் சென்றார்களே, அப்போது வட மாநிலத்தவர்கள்மீது பிரதமர் மோடிக்கு ஏற்படாத கரிசனம், இப்பொழுது வருவதாகக் காட்டிக் கொள்வது ஏன்?

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உதவி வந்ததையும் தடுத்த “தயாள குணவாதிகளா” இப்படிப் பேசுவது?

எல்லாம் தேர்தல் படுத்தும்பாடு! மக்கள் மறந்து விட மாட்டார்கள்.


இந்தியாவில் வாழும் மக்கள், பி.ஜே.பி.யின் இந்தப் போலித்தனத்தை, இரட்டை வேடத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

பீகாரில் பிரதமர் மோடியின் பேச்சை, தமிழ்நாட்டின் முதலமைச்சர் மட்டுமல்ல, அனைத்துக் கட்சியினரும், தரப்பினரும் (பி.ஜே.பி., அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகளைத் தவிர) கண்டித்துள்ளனர்.

**பாசிசத்தை வீழ்த்திட வீறுகொண்டு எழவேண்டும்!**

எந்தத் தில்லுமுல்லுகளைச் செய்தாவது ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்க வேண்டும்; அதன்மூலம் தங்கள் ஹிந்துத்துவா நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நினைக்கிற இந்தப் பிற்போக்குப் பாசிசத்தை வீழ்த்திட, அகில இந்திய அளவில் முற்போக்குச் சக்திகள் வீறு கொண்டு எழட்டும்!

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருத்தணி நகர மின் நிலையத்தில் நள்ளிரவில் திருத்தணி சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட கழக செயலாளருமான திருத்தணி எஸ்.சந்திரன் பருவமழை காலங்களில் மின் விநியோகத்தை உறுதி செய்வதற்கான முன்னெச்சரிக்கை பணிகள் போன்றவை குறித்து ஆய்வு செய்தார் உடன் மின்சார துறை அதிகாரிகள் உள்ளனர்.

## கொளத்தூர் பெரியார் நகர் ‘முதல்வர் படைப்பகம்’ திறப்பு விழா!

# இம்மாதம் 20 ஆம் தேதிக்குள் முதலமைச்சர் திறந்து வைக்கிறார்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, நவ. 4-
தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (3.11.2025) வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, பெரியார் நகர் நூலகத்தை புதுப்பித்து கட்டப்பட்டு வரும் ‘முதல்வர் படைப்பகம்’ கட்டிடத்தின் இறுதிக் கட்ட பணிகள், அகரம், ஜெகநாதன் தெருவில் புதிதாக கட்டப்பட்டு வரும் கொளத்தூர் மறுவாழ்வு மற்றும் இரத்த சுத்திகரிப்பு மையம் (Kolathur Dialysis Centre), கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் புதிய நவீன சந்தை (Kolathur New Modern Market) மற்றும் கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் “மக்கள் சேவை மையத்தின் (Citizen Service Centre)” முன்னேற்றப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

நடப்பு நிதியாண்டில் மானியக் கோரிக்கையின் போது, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் கொளத்தூரில் அகரம் பகுதியில் அமைந்துள்ள கொளத்தூர் முதல்



வர் படைப்பகம் போன்று சென்னையின் வடசென்னையில் 2, இதர பகுதிகளில் 13 என 15 இடங்களில் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். அதன் படி கொளத்தூரில் பெரியார் நகர் பகுதியில் செயல்பட்டு வந்த பழமையான நூலக கட்டிடம் இடிக்கப்பட்டு, ரூபாய் 6.50 கோடி மதிப்பீட்டில் நூலகம் புனரமைப்பு மற்றும் போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவர்களுக்கான பயிற்சியகம், கட்டணமில்லா இணைய வசதி, குளிரூட்டப்பட்ட பயிற்சி கூடம், கணினி அறை கொண்ட பெரியார் நகர் முதல்வர் படைப்பகத்தின் இறுதி கட்டப் பணிகளை இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கொளத்தூர் ஜெகநாதன் நகரில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் 4 தளங்களில் நவீன வசதிகளுடன் அமைய உள்ள இலவச டயாலிசிஸ் சிகிச்சை பிரிவு, செயற்கை உறுப்பு பொறுத்தும் சிகிச்சை பிரிவு, இயன்முறை சிகிச்சை பிரிவு உள்ளிட்ட ஒருங்கிணைந்த மருத்துவ மையம், கொளத்தூர் பேப்பர் மில் சாலையில் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மூன்று தளங்களில் கட்டப்பட்டு வரும் நவீன சந்தை கட்டுமான பணியை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் கொளத்தூர் பேப்பர் மில்ஸ் சாலை, விநாயகபுரம் பகுதியில் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் 4 தளத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் மக்கள் சேவை மையத்தின் (Citizen Service Centre)” முன்னேற்றப் பணிகளை இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த மாதம் 20 ஆம் தேதிக்குள் பெரியார் நகர் முதல்வர் படைப்பகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்க உள்ளார், நூலகத்துடன் கூடிய, போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி பள்ளியும் அமைக்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் 84 மாணவர்கள் பயிற்சி பெறும் வகையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய வகுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. அதிக பணம் செலுத்தி போட்டி தேர்வுக்கான பயிற்சி மையங்களில் பயில முடியாத மாணவர்களுக்கு இந்த பயிற்சி மையம் மிகுந்த உதவியாக இருக்கும்.

மேலும் கொளத்தூர், ஜெகநாதன் தெருவில் சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டு அவதிப்படுவதற்காக பிரத்தியேக டயாலிசிஸ் சிகிச்சை வழங்குவதற்கான இலவச சிகிச்சை மையம் மற்றும் எதிர்பாரா விதமாக கை கால்கள் இழந்தவர்களுக்கு செயற்கை கை மற்றும் கால் பொருத்தக்கூடிய சிகிச்சை மையம், இயன்முறை சிகிச்சை பிரிவு உள்ளிட்ட வசதிகள் கொண்ட மருத்துவ மையம் வரும் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் மக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ளது.

சென்னை வசதியற்ற, நடுத்தர மக்களுக்காக பல திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மேற்கொண்டு வருகிறார். கொளத்தூர் தொகுதியை ஒட்டுமொத்தமாக தன்னிறைவு பெறும் தொகுதியாக மாற்ற வேண்டும் என்ற நடவடிக்கையை முதலமைச்சர் மேற்கொண்டு வருகிறார், அதன் ஒரு பகுதியாகத்தான் இதுபோன்ற பணிகள் நடைபெற்று வருகிறது. இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், கொளத்தூர் காவல் துணை ஆணையர் பி.குமார், அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம் (சென்னை) முதல்வர் டாக்டர் டி.எஸ்.சரவணன், மண்டலக் குழுத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், உதவி பதிவுத்துறை தலைவர் (சென்னை வடக்கு) திருமதி.ரூபியா பேகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி.மு.இந்துமதி, டாக்டர் பால் பிரின்சிலி ராஜ்குமார், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஐசிஎப்.முரளிதரன், சந்துரு, மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி. தாவூத்பீ, திருமதி.அமுதா, திருமதி.யோகப்பிரியா, திருமதி.ஸ்ரீதணி மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 257 வது நாள்!

## அம்பத்தூர் தெற்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, நவ.4-
தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 257 ஆம் நாளான - கழகத்தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (03.11.2025), அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 88, கலைவாணர் நகர் மெயின் ரோடு, கழக





அலுவலகம் அருகில். 2) வட்டம் 87, ஆசைத்தம்பி தெரு, மதியழகன் நகர், பாடி, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு. கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர் தெற்கு/வடக்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர். டீக்கா, வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## தேனி வடக்கு மாவட்டம்

# வீரபாண்டி பேரூராட்சி தலைவர் கீதா - சசி இல்ல மண விழா!

## கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்!

தேனி, நவ. 4 -
தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சி சேர்மன் கீதா சசி - சசி தம்பதியின் மகள் எஸ்.சகீக்கும், உப்புக்கோட்டை மைக்கேல்- தமிழரசி தம்பதியின் மகன் எம்.பாண்டீஸ்வரன் என்ற ப்ரணவ் விற்கும் தேனி அருகே பெரியகுளம் சாலையில் மதுராபுரியில் உள்ள பிஎச்பி திருமண மஹாலில் திருமணம் நடைபெற்றது.

தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ் செல்வன் எம்.பி தலைமை வகித்து திருமணத்தை நடத்தி வைத்தார். விழாவிற்கு தேனி தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ரத்தினசபாபதி முன்னிலை வகித்தார். விழாவில் கலந்து கொண்டவர்களை வீரபாண்டி பேரூராட்சி சேர்மன் கீதா சசி - சசி தம்பதி, உப்புக்கோட்டை மைக்கேல் - தமிழரசி தம்பதி வரவேற்றனர்.

விழாவில், பெரியகுளம் தொகுதி எம்.எல்.ஏ சரவணக்குமார், திமுக தீர்மானக்குழு இணை செயலாளர் ஜெயக்குமார், உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எல்.மூக்கையா, தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் பி.டி.செல்லப் பாண்டியன்,தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. துணை செயலாளர்கள் ராசிசெந்தில், திருக்கண்ணன், மாவட்ட பொருளாளர் சுரேஷ், ஒன்றிய செயலாளர்கள் போடி மேற்கு முன்னாள் எம்.எல்.ஏ லட்சுமணன், போடி கிழக்கு அய்யப்பன், பெரியகுளம் வடக்கு எல்.எம்.பாண்டியன், சின்னமனூர் மேற்கு முருகேசன், திமுக நகரச் செயலாளர்கள் பெரியகுளம் முகமது இலியாஸ், தேனி தெற்கு நாராயணபாண்டியன், போடி புருஷோத்தமன், தேனி வடக்கு நகர பொறுப்பாளர் பாலமுருகன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சங்கர், முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் தெய்வேந்திரன், வீரபாண்டிபேரூர் செயலாளர் செல்வம். பேரூராட்சி தலைவர்கள், சேர்மன்கள் ஆண்டிபட்டி பொன் சந்திரகலா ..பூதிப்புரம் கவியரசு, வடுகபட்டி நடேசன், தாமரைக்குளம் பால்பாண்டி, தென்கரை நாகராஜன், கெங்குவார்பட்டி தமிழ்செல்வி, தேவதானப்பட்டி முருகேஸ்வரி ராமையா, போடி மீனாட்சிபுரம் திருப்பதி, மேலச்சொக்கநாதபுரம் கண்ணன், பல்வேறுத் துறை அரசு அதிகாரிகள், பேரூராட்சி செயல்அலுவலர்கள், தேனி வடக்கு மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், வணிகர்கள், உறவினர்கள், நண்பர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.




சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக பாடியநல்லூர் ஊராட்சியில் “என் வாக்குச் சாவடி வெற்றி வாக்கு சாவடி” அவசர ஆலோசனைக் கூட்டம் ஒன்றிய அவை தலைவர் ஏ. காசீம் முஹம்மது தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் சிறப்புரையாற்றினார். உடன் ஒன்றிய நிர்வாகிகள் ப.சீனிவாசன், கே.எம்.துரைவேல், கே.வீரம்மாள். செ.அரசு. இரா.விஜயன். பா.சேகர், பொன் கோதண்டன். மற்றும் பாக ஒருங்கிணைப்பாளர்கள், கிளை செயலாளர்கள், BLA2, BLC, BDA, BYA மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கிளை கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு ஆலோசனைக் கூறினர்.






தாம்பரம் மாநகரம் – தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் மண்டல தலைவர் எஸ்.இந்திரன், தலைமையில், பகுதி இளைஞரணி அமைப்பாளர் கோ.பிரதீப்குமார் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற தாம்பரம் மேற்கு பகுதிக்குட்பட்ட, வட்ட இளைஞரணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், பாக இளைஞரணி அமைப்பாளர்கள் ஆகிய பொறுப்புகளுக்கு தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தாம்பரம் சட்டமன்ற தொகுதி இளைஞரணி பார்வையாளர் ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ ஆகியோர் விண்ணப்பித்தவர்களை நேர்காணல் செய்து கலந்துரையாடினார்கள். உடன் கி.வேல்மணி, லயலோ. கே.மதன், வை.கௌதமன், ஆர்.பொன்இளவரசன், கட்பிஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி, இ.ரவிக்குமார், வீ. கார்த்திக், ச.இராஜேஷ், வி.சிவசுப்பிரமணியம், வட்ட செயலாளர்கள், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக தோழர்கள் பங்கேற்றனர்.